கற்றலுக்காக கற்றுயர்

2018

முதல் எழுத்து

மமா/நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயம்
அக்கரப்பத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல் எழுத்து
2018

அ - 05 எழுத்து - 05

2019.01.20

மமா/நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயம்.
அக்கரப்பத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்	:	முதல் எழுத்து
பதிப்பு	:	ஜனவரி - 2019 (2018)
முன் சித்திரம்	:	மாணவர்கள்
வெளியீடு	:	நு/அக்கரப்பத்தனை ஆரம்ப த.வி, அக்கரப்பத்தனை.
ஆக்கம்	:	மாணவர்கள்
பொறுப்பாசிரியர்	:	ஆசிரியர் சி.சிவக்குமார்
கணினி வடிவமைப்பு	:	நியு ஷைன் கம்பியூட்டர்ஸ், மன்றாசி. 0512230158
உற்பத்தி விலை	:	230/=
புத்தக விலை	:	180/=

Book Name	:	Muthal Eluththu
Edition	:	January - 2019 (2018)
Front Page	:	Students
Published By	:	CP/N/Agarapatana Primary T.V, Agarapathana
Article	:	Students
Editor in Charge	:	Teacher S.Sivakumar
Computer Designing	:	New Shine Computers, Glenlyon. 0512230158
Price	:	180/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி வாழ்த்து,

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசைக்கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

- மகாகவி பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலய கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து செய்தி

மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு பாடசாலை வழங்கும் முயற்சி பாராட்டுக்குரியது. அதன்படி மாணவர்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொணர இவ்வருடமும் உங்களது பாடசாலையில் இப்படிப்பட்ட புத்தகம் வெளிவருவது குறித்து வாழ்த்து தெரிவிக்கிறேன். ஆரம்பக்கல்வி பிள்ளைகளின் வாழ்க்கையில் பெறும் முக்கியத்துவமானது மிகவும் இன்றியமையாதது. அதுபோல அவர்களுடைய ஆக்கங்கள், அவர்களின் வெளிப்பாடுகள் என்பன மூலம் பிற்காலத்தில் மிகச்சிறந்த மனித சமுதாயமாக அவர்கள் மிளிர்வார்கள் என நான் நம்புகின்றேன்.

பாடசாலைக் காலத்தில் இவர்கள் பெற்ற பயனுறுதிமிக்க அனுபவங்கள் அந்த பிள்ளைகளின் ஆக்கவெளிபாடு, மறைந்திருக்கும் திறமைகள் என்பவற்றை முடிந்தளவு வெளிக்கொணர உந்து சக்தியாக அமைந்திருக்கிறது. இதற்காக பெறுமதியான நேரத்தை செலவிட்டு உங்களின் ஆசிரிய குழாம் வழங்கும் உற்சாகம், மாணவர்களின் முயற்சி என்பன பற்றி நான் மிகவும் சந்தோசமடைவதோடு உங்கள் முயற்சிகள் மேலும் சிறக்க இனிதே வாழ்த்துகிறேன்.

திரு M.G.A.பியதாச
வலய கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி பணிமனை,
நுவரெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டக்கல்வி கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து செய்தி

இலக்கும், இலக்கியமும் இல்லா சமூகத்தை இயக்கமில்லாத சமூகமெனலாம். ஒரு மக்கள் கூட்டத்தின் அசைவியக்கம் அவர்களால் புடம் போடப்படுகின்ற இலக்கியங்களிலும் - எழுத்துக்களிலும் எடுத்துக் காட்டப் படுதலினால் இலக்கியங்கள் முதன்மை பெறுகின்றன.

நாளைய சமூக படைப்புக்களை முன்வைத்தலுக்கான அரும்புகள் இன்றுகளில் வழிபடுத்தப்படுவது காலத்தின் கடனாகின்ற இவ்வேளையில் எதிர்கால உருவாக்கங்களை செப்பனிட அவர்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்தல் எமது தார்மீக கடமையென உணர்கின்றேன் இந்த உன்னத பணியை நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் தமது முதல் எழுத்தினூடாக முதன்மை படுத்துகின்றனர். சுடர்விளக்காயினும் - தூண்டுகோள் தேவை என்பதால் எதிர்கால எழுத்தாளர்கள் முதல் எழுத்தினூடு எழுச்சி பெறுவார்களென திடமாக நம்பிக்கை கொண்டு பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துக்களுடன்

T.வடிவேல்
கோட்டக்கல்வி பணிப்பாளர்
கோட்டம் 03
நுவரெலியா கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

மனிதனுடைய எதிர்காலத்தையும் நல்வாழ்வையும் ஒளிமயமாக்குவதே கல்வியின் பிரதான நோக்கமாகும். மழலைச் செல்வங்களை பாடசாலை எனும் கலையகம் தன்னுள் அன்புடனும், ஆர்வத்துடனும், பாசத்துடனும் அரவணைத்து அவர்களை சிறந்த கல்விமான்களாக, வைத்தியராக, பொறியியலாளர்களாக, ஆசான்களாக, அறிவியல் மேதைகளாக, வழக்கறிஞர்களாக, விஞ்ஞானிகளாக உருவாக்கி நாட்டில் சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த நற்பிரஜைகளாக மிளிரச்செய்வதற்கு கல்விச்செல்வத்தின் ஆரம்ப அடித்தளத்தை மிக உறுதியாகவும் சிறப்பாகவும் உருவாக்கிக் கொடுக்கின்ற பெருமை ஆரம்பக்கல்வி வகுப்பறையில் கற்பிக்கின்ற ஆசிரிய பெருந்தகைகளுக்கு பங்கு உண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

அந்த வகையில் ம.மா/நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முயற்சியால் அவர்களின் வழிகாட்டலின்பால் ஆரம்பக்கல்விப் பிரிவு மாணவச் செல்வங்களின் கை வண்ணங்களினால் படைக்கப்பட்டு மலர்கின்ற "முதல் எழுத்து" எனும் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், ஆக்கங்களை படைத்த மாணவர்களையும் பாராட்டுகிறேன்.

S.செல்வராஜா
உதவி கல்விப் பணிப்பாளர்
(ஆரம்ப பிரிவு)
வலயக்கல்வி பணிமனை
நுவரெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு அதிதியின் வாழ்த்துரை

ஐந்தாவது மலரில் அகமகிழ்ந்து முதல் மலரில் கால் பதித்த தடங்களை மீட்டிப்பார்க்கின்றேன். அந்நினைவுகளோடு இம்மலரில் சங்கமிப்பது அளவற்ற மகிழ்ச்சியளிக்கின்றது. 2014 ஆண்டு "முதல்எழுத்து" முதல் பிரசவத்தில் அதன் பொறுப்பாசிரியராய் இருந்து எம் மாணவர்களின் ஆக்கதிறனுக்கு அடித்தளமிட்டபோது இருந்த அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பின் காரணமாக சிறப்பாக அச் சஞ்சிகையை கொண்டு வர முடிந்தது. அதே அதிபர் ஆசிரியர்களின் செயற்பாட்டுத்திறன் இன்னும் வலுப்பெற்று தொடர்ச்சியாக ஐந்தாவது மலரை தொட்டிருப்பதில் நானும் அவர்களில் ஒருவனாக அகமகிழ்கின்றேன்.

வாசிப்பின் நேசிப்பையும் எழுத்தாக்க திறனையும் இவ்வாறான நூல்களின் வரவின் மூலமே முன்னெடுக்க முடியும் அதற்கான அஸ்திவாரமாக ஓர் ஆரம்ப கல்வி பாடசாலை தொடர்ந்தும் முன்நிற்பது என்பது மிக அரிது. இவ்வாறான சூழலில் அக்கரப்பத்தனை ஆரம்பக்கல்வி பாடசாலையின் இம்முயற்சி பெரும் பாராட்டுக்குரியது.

எழுத்தாக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையவன் என்ற வகையில் தடைகளை தகர்த்து முன்னின்று செயற்படும் அதிபர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் திறன்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களும்.. நன்றிகளும்..

கவிஞர் எழுத்தாளர்:
செ.ஜெ.பயிபான்.
'தீ'யோடு பயணிக்கும் தேனீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி...

ஆரம்பக் கல்வி என்பது கல்வியின் அடித்தளமாகும். அடித்தளத்தில் காலடி எடுத்து வைக்கும் சிறு குழந்தையின் பிஞ்சு மனதில் புதிய விடயங்கள் விதைப்பது மிக சுலபமாகும் எனவே ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு மாணவனும் மகிழ்ச்சியான சூழலில் சுதந்திரமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் கற்பித்தல் செயற்பாடானது அவர்களை ஊக்கப்படுத்துவதுடன் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டவும் கல்வியில் விருப்பமும் கற்றலில் தன்னம்பிக்கை ஏற்படவும் உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிப்பட வழி காட்டுவதுடன் அறிவு திறன் மனப்பாங்கை வழங்கி தற்கால உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் நற்பிரஜைகளை உருவாக்குவதே ஆகும்.

அந்த வகையில் முதல் எழுத்து சஞ்சிகையானது மாணவர்களின் எண்ணங்களை சுதந்திரமான முறையில் வெளிக்கொணர அதிபர், ஆசிரியர்கள் எடுத்துள்ள முயற்சி பாராட்டுக்குரியது. மாணவர்களை பல்துறை வளர்ச்சிக்குத் தூண்டும் இச் சஞ்சிகை தொடர்ந்து சிறப்பாக வெளிவர நல்வாழ்த்துக்களை கூறுவதோடு இப்பாடசாலையின் செயற்பாட்டிற்கு ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் இச்சஞ்சிகை வெளிவர காரணமாக இருந்த அனைவருக்கும் எனது பாராட்டினை அகமகிழ்ந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி வாகீஸ்வரி ஸ்ரீதேவன்
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி)
நுவரெலியா வலயம், கோட்டம் III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி...

பாடசாலை வரலாற்றை தொடம்பதிக்கும் வகையில் ஆரம்பக்கல்வியில் அடித்தளம் இட்டு சின்னஞ் சிறார்களின் கைவண்ணத்தை சஞ்சிகை வடிவில் தருவது எளிதான காரியமன்று.

மாறிவரும் உலகில் கலைத்திட்ட மாற்றத்திற்கு அமைவாக தேர்ச்சிகளின் அடிப்படையில் நடைமுறை படுத்தியுள்ள இச் செயற்திட்டமானது மாணவர்களின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு ஒரு வித்தாக அமைகின்றது.

மொழித்திறன் விருத்தியை விருத்தியடைய செய்யும் வகையில் கவனமாக செவிமெடுத்து தெளிவாகப் பேசி கருத்துக்கள் புலப்பட வாசித்து சரியாகவும் செம்மையாகவும் எழுதுவதற்கு முதலேணியாக இச்செயற்பாடு அமைவதோடு சித்திரத்தின் மூலமாக மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த அம்சமாகும்.

மாணவர்களின் ஆக்கத்திறன்களை ஊக்குவித்து வழிகாட்டிய அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்களை பாராட்டுவதோடு ஐந்தாவது முதலெழுத்து சஞ்சிகையை வெளியிட்ட மாணவர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள், ஆசிகள் உரித்தாகட்டும்.

திருமதி S.சுந்தரம்
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி)
நுவரெலியா வலயம், கோட்டம் III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி...

முதல் எழுத்து ஐந்தாவது இதழ் முகிழ்த்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்பக்கல்வி மாணவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்தும் வேலைத்திட்டமாக ஒவ்வொரு வருடமும் எமது பாடசாலையின் முதல் எழுத்து நூல் தொடர்ச்சியாக வெளிடப்பட்டு வருகின்றது.

பாடசாலை என்பது வெறுமனே கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நியதி சார்ந்த நிறுவனமாக மட்டும் நிலைத்திருப்பதை விட மாணவர்களிடம் ஒளிந்திருக்கும் அல்லது மறைந்திருக்கும் திறமைகளையும் தனித்துவமான ஆற்றல்களையும், தோண்டியெடுக்கும் களமாக இருப்பதே சாலச் சிறந்தாக அமையும் என்ற எண்ணத்திற்கேற்ப எமது பாடசாலை இங்குள்ள மாணவர்களின் பல்வேறுபட்ட திறமைகளையும் ஊக்குவிக்கும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அவ்வாறானதொரு செயற்பாட்டின் செயல் வடிவமே இவ் முதல் எழுத்து இதழாகும்.

தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாகவும் சிறப்புடன் இதழ் வெளிவந்திருப்பது சந்தோசமளிக்கிறது. இம்முறையும் ஆர்வத்துடன் ஆக்கங்களை தந்திருக்கும் சிறார்களுக்கும், அதற்கு வழிகாட்டி ஊக்குவித்த ஆசிரியர்களுக்கும், இவற்றை நூலுருவாக்கி அழகு படுத்தியிருக்கும் பொறுப்பாசிரியர் திரு.S.சிவக்குமார் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன். முதல்எழுத்து இன்னும் பல புதுப்புது அம்சங்களுடன் மீண்டும் மீண்டும் இதழ் விரிக்க மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துக்களுடன்.

மு.லோகநாதன். அதிபர்
நு/அக்கரப்பத்தனை ஆரம்ப த.வி
அக்கரப்பத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் ஆசி

மாணவச் செல்வங்களின் துள்ளியமான திறமைகளை இனங்கண்டு அதனை வெளிக்கொணர செய்வது எமது கடமையாகும்.

மாணவர்களை கற்றலில் மாத்திரமின்றி வேறுபல திறமைகளிலும் இனங்கண்டு ஊக்குவித்தல் அவசியமாகின்றது. அதனடிப்படையில், காத்திரமான படைப்பாளிகளை எதிர்காலத்தில் உருவாக்கும் நோக்குடன் அவர்களின் ஆக்கத்திறன், மற்றும் வாசிப்புதிறனை மையமாக கொண்டு, மொட்டுக்களின் கைவண்ணங்களை ஒன்றுதிரட்டி முதல் எழுத்து என்ற நாமத்துடன் ஐந்தாவது படைப்பாக உங்கள் முன் கொண்டு வந்திருக்கின்றோம். மாணவர்கள் படைக்கின்ற படைப்புக்களை வெளிக்கொணர செய்வது ஆசிரியர்களாகிய எங்களின் கடமையாகும்.

எங்களின் வாழ்த்துக்களும் ஆசிகளும்.

ஆசிரியர்கள்
ம.மா/நு/அக்கரப்பத்தனை
ஆரம்ப தமிழ் வித்தியாலயம்.

<u>ஆசிரியர்கள்.</u>

திருமதி B.விஜயலதா

திருமதி M.இளங்கேஸ்வரி

திரு T.புண்ணியமூர்த்தி

திரு A.ஆறுமுகம்

திரு S.சிவக்குமார்

<u>ஆசிரிய பயிலுனர்கள்.</u>

திரு மாதவன் பிரதாப்

செல்வி தேசாந்தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு தொடர்களும் கருத்துக்களும்

1. அள்ளி இறைத்தல் - அதிகமாக கொடுத்தல்
2. ஆசை வார்த்தை - ஏமாற்று பேச்சு
3. ஈவிரக்கம் - கருணை
4. உள்ளங்கை நெல்லிக்கனி - வெளிப்படையாக தெரிதல்
5. ஏட்டுச்சுரக்காய் - வாழ்வோடு தொடர்பில்லாத கல்வி
6. ஒற்றை காலில் நிற்றல் - விடாப்பிடி
7. கண்திறத்தல் - அறிவு உண்டாதல்
8. கண்மலர்தல் - விழித்தல்
9. அடிப்யொற்றுதல் - பின்பற்றுதல்
10 தோல் கொடுத்தல் - உதவி செய்தல்
11. அள்ளிக் குவித்தல் - நிறைய சம்பாதித்தல்
12. ஓட்டை வாயன் - இரகசியத்தை காக்க தெரியாதவன்
13. அடியிடுதல் - தொடங்குதல்
14. காது கொடுத்தல் - கவனித்து கேட்டல்
15. செவிமெடுத்தல் - ஆர்வத்தோடு கேட்டல்

கீர்த்திகாசன்
மதுஷான்
டிலுசன்
சங்கவி
ரக்ஷிதா (தரம் - 4)

சுயசரிதை

நான் இன்று வங்கியில் ஆயிரம் ரூபாய் கட்டுக்குள் அடங்கிக் கிடக்கின்றேன். நான் இங்கு வரும் முன்னர் பல தரப்பட்ட மனிதர்களிடம் பல்வேறு அனுபவங்களை பெற்றிருக்கிறேன். நான் முதலில் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தேன். எனது உடலில் இலங்கையில் உள்ள அழகிய இடங்களை பதித்திருக்கின்றனர். சிலர் என்னை எப்போதும் தங்களுடன் வைத்திருக்க ஆசைப்பட்டனர்.

H.ஸ்ரீபிரசாந்
தரம்-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிஸ்வரன், தரம் 01

சஞ்சய்விசால், தரம் 01

S.சிதுக்சன், தரம் 01

S.சுவேத்தா, தரம் 01

சஞ்சய்விசால், தரம் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.சஷ்டிகா, தரம் 01

M.மனோஜ், தரம் 01

M.சிமிரா, தரம் 01

R.திலுக்சிக்கா, தரம் 01

பவிஸ்காந், தரம் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததில் எனக்கு பிடித்த கவிதை

குடையின் சுயசரிதை

எனக்கு இன்னும்
புதிராக இருக்கிறது
நான் மழைக்காகவா..?
இல்லை வெயிலுக்காகவா..?

உலகத்தின் முதல் குடை
மரத்தின் கிளையாம்
வரலாற்று வார்த்தைகளின் படி
வெயிலுக்கு நிழலளிக்க
வடிவமைக்கப்பட்டவன்

மன்னர்களில் இருந்து
தெய்வங்களுக்கான
தோரணம் ஆனேன்

சீனா முதல் குடையை
சீராக உருவாக்கியது
இத்தாலி என்னை
அலங்கார பொருளாக்கியது

எழுநூறு ஆண்டுகளுக்கு பிறகு
நீர் புகாத தன்மை என்னை
மழைக்கு பயன்படுத்தியது.

புதிய வர்ணங்கள்,
புதிய பரிமாணங்கள்,
பூவையரிடம் என்னை சேர்கின்றன.

சந்தைப்படுத்தலில்
தேவைகளை மறந்து
தோரணைக்காகவே நான்
வாங்கப்படுகிறேன்.

மனிதர்களின் ரசனைகளோடு
குணங்களையும்
குடைகள் வெளிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததில் எனக்கு பிடித்த கவிதை தொடர்ச்சி...

ஒரு குடையில் இருவர்
இணைந்து செல்லவும்
மூத்த முதியோர்களின்
மூன்றாவது காலாகவும் நான்

சிறு மழைத்துளிக்கே
குடைகளை எடுப்பவர்களே
வானத்து வார்த்தைகள்
மழையாக உங்கள்
மடியில் மலர முயற்சிக்கின்றது.

இன்னொரு தடவை
இடை மறிக்காதீர்கள்
இயற்கையோடு வாழ்வது
இறைவனோடு வாழ்வதாகும்

மன்னர் முதல் மகளிர் வரை
என் கரம் பிடித்தாலும்
சாலையோரத்தில் கிழிந்த குடையுனுள்
தூங்குபவனை பார்க்கையில்
என் படைப்பின் அர்த்தம் புரிகிறது.

என் புதிருக்கு விடை கிடைத்தது.
பலருக்கு நான் குடை
சிலருக்கு நான் வீடு
வீடான குடையினுள்
என் ஆன்மா ஒளிந்திருக்கிறது.

என்னை விரிக்கும் போது
ஒவ்வொரு முறையும்
வீடான குடையின்
வலியை உணருங்கள்
உங்களின் உதவும் கரங்கள்
கண்ணீர் துடைப்பதை உணர்கிறேன்...

S.அபிசா
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.வணிக்கா, தரம் 02

யதுர்சிக்கா, தரம் 02

S.சகுஜன், தரம் 02

சர்வின், தரம் 02

S.சாகித்தியன், தரம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.லக்சியா, தரம் 02

S.லோசன், தரம் 02

S.இவஞ்ஜலின், தரம் 02

S.கிரிஜா, தரம் 02

S.ஜதுர்சினி, தரம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி வளர்ச்சிக்கு பங்காற்றியவர்கள்

பொன்னம்பலம் அருணாசலம்
செய்த தொண்டு - இலங்கையில் தமிழ் சங்கம் வளர்த்தல்

ஸ்ரீ ஆறுமுக நாவலர்
வாழ்ந்த காலம் - 1822 முதல் 1879 வரை
செய்த தொண்டு - கவிதை இலக்கியம் ஊடாக தழிழை வளர்த்தல்

சூளை சோமசுந்தனர்
வாழ்ந்த காலம் - 1846 முதல் 1901 வரை

ஸ்ரீ மாம்பழக் கவிசங்க நாவலர்
வாழ்ந்த காலம் - 1836 முதல் 1886 வரை
செய்த தொண்டு - கவிதை இலக்கியம் ஊடாக தழிழை வளர்த்தல்.

வை.மு.சடகோப ராமானுஜர்
வாழ்ந்த காலம் - 1871 முதல் 1910 வரை
செய்த தொண்டு - சிறந்த முறையில் உரையாடி தமிழை வளர்த்தவர்

வி.கோ.சூரிய நாராயணனார்
வாழ்ந்த காலம் - 1870 முதல் 1903 வரை
செய்த தொண்டு - பரிமாற் கலைஞராகி நாடகத் தமிழ் வளர்த்தார்

சீர்காழி முத்து காண்டவர்
வாழ்ந்த காலம் - 1868 முதல் 1930 வரை
செய்த தொண்டு - ஐரோப்பியர்களுக்கு தமிழை அறிமுகப்படுத்தினார்

கோ.வடிவேலனார்
வாழ்ந்த காலம் - 1863 முதல் 1936 வரை
செய்த தொண்டு - வேதாந்த வித்தகர் விரிவான குறளுரை கண்டவர்.

தொடர்ச்சி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2015

தமிழ்மொழி வளர்ச்சிக்கு பங்காற்றியவர்கள்

சாமுவேல் எம் கிறீன்
வாழ்ந்த காலம் - 1822 முதல் 1884 வரை
செய்த தொண்டு - நூற்றாண்டுக்கு முன் தமிழ் மருத்துவர்

வீரமா முனிவர்
வாழ்ந்த காலம் - 1680 முதல் 1747 வரை
செய்த தொண்டு - தீந்தமிழ் காப்பியமான தேம்பாவனியை படைத்து கொடுத்தவர், தமிழ் அகராதி உருவாக்கியவர்.

தனி நாயக அடிகளார்
வாழ்ந்த காலம் - 1913 முதல்1986 வரை

ந.மு வேங்கட சாமியார்
வாழ்ந்த காலம் - 1884 முதல் 1944 வரை
செய்த தொண்டு - சேரன் சிலம்புக்குச் சிறப்புரை கண்டவர்

சி.கந்தையா
வாழ்ந்த காலம் - 1893 முதல் 1967 வரை
செய்த தொண்டு - தமிழர் பெருமையை தரணிக்கு உரைத்தவர்

பாவனர்
செய்த தொண்டு - தனித்தழிழ் இயக்கம் கண்டவர்.

நடேசபிள்ளை
தொண்டு - சகுந்தனை வெண்பா நூலை இயற்றி தமிழ் வளர்த்தார்.

தொகுப்பு : R.சுஜீவன்
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.திர்சாலினி, தரம் 03

J.அம்சிக்கா, தரம் 03

J.அம்சிக்கா, தரம் 03

அம்சாயினி, தரம் 03

V.பிரவின், தரம் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.ஸ்ரீதிகாசன் ,தரம் 04

S.ஷுசியா,தரம் 04

R.துஷ்யந்,தரம் 04

R.தக்ஷான் ,தரம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயம்

- சைவசமய குரவர்களில் சிலர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றவர்கள்.
- சைவசமயத்திற்கு தொண்டாற்றியவர்கள் சிலர் திருமலிசைத்தேவர், திருமூலர் அருணகிரிநாதர், ஆவார்.
- சைவசமய தலங்களில் சில முன்னேச்சரம், நல்லூர் கந்தசாமிகோயில், திருகோணேச்சரம் ஆகியன.
- சைவசமயத்தில் நிறைய தேவாரங்கள் பாடப்பட்டுள்ளன.
- சைவசமய பண்டிகைகள் சில நவராத்திரி, சிவராத்திரி, தீபாவளி, பொங்கல் பண்டிகை என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.
- சைவசமய விரதங்கள் சில கௌரிவிரதம், சதுர்த்திவிரதம், கந்தசஷ்டிவிரதம், ஆகியன.

S.விஸ்மிதா
தரம் - 05

K.டிலஸ்கா
தரம் - 05



G.சருபன்
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017

இலங்கை நாட்டின் சிறப்பம்சங்கள்

இலங்கையின் அமைவிடம்

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
இலங்கை கண்ணீரத் துளி மற்றும் மாம்பழ வடிவிலானது
இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ளது.

நாட்டினுடைய விபரம்

இலங்கை ஓர் அழகிய தீவாகும்.
இலங்கையில் அண்ணளவாக 2 கோடி மக்கள் வாழ்கின்றனர்.
தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர் போன்ற இனத்தவர்கள் வாழ்கின்றனர்.
இலங்கை மக்களால் இந்துசமயம், பௌத்தம், கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் பின்பற்றப்படுகின்றன.
தமிழ்மொழி, சிங்களமொழி ஆகியன பிரதான மொழிகளாக பேசப்படுகின்றன.
இலங்கையின் அடையாளமாக தேசியகீதம், தேசியஇலட்சினை, தேசியகொடி, தேசியமிருகம், தேசியமலர், தேசியபறவை என்பன காணப்படுகின்றன.

வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்கள்

சீகிரியா
பொலனறுவை
கண்டி
அநுராதபுரம்
யாழ்ப்பாணம்
கதிர்காமம்
திருக்கோணமலை
மன்னார்
கொழும்பு
முன்னேச்சரம்
காலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயம்

- சைவசமய குரவர்களில் சிலர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றவர்கள்.
- சைவசமயத்திற்கு தொண்டாற்றியவர்கள் சிலர் திருமலிசைத்தேவர், திருமூலர் அருணகிரிநாதர், ஆவார்.
- சைவசமய தலங்களில் சில முன்னேச்சரம், நல்லூர் கந்தசாமிகோயில், திருகோணேச்சரம் ஆகியன.
- சைவசமயத்தில் நிறைய தேவாரங்கள் பாடப்பட்டுள்ளன.
- சைவசமய பண்டிகைகள் சில நவராத்திரி, சிவராத்திரி, தீபாவளி, பொங்கல் பண்டிகை என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.
- சைவசமய விரதங்கள் சில கௌரிவிரதம், சதுர்த்திவிரதம், கந்தசஷ்டிவிரதம், ஆகியன.

S.விஸ்மிதா
தரம் - 05

G.சருபன்
தரம் - 05

K.டிலஸ்கா
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017

இலங்கை நாட்டின் சிறப்பம்சங்கள்

இலங்கையின் அமைவிடம்

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
இலங்கை கண்ணீரத் துளி மற்றும் மாம்பழ வடிவிலானது
இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ளது.

நாட்டினுடைய விபரம்

இலங்கை ஓர் அழகிய தீவாகும்.
இலங்கையில் அண்ணளவாக 2 கோடி மக்கள் வாழ்கின்றனர்.
தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர் போன்ற இனத்தவர்கள் வாழ்கின்றனர்.
இலங்கை மக்களால் இந்துசமயம், பௌத்தம், கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் பின்பற்றப்படுகின்றன.
தமிழ்மொழி, சிங்களமொழி ஆகியன பிரதான மொழிகளாக பேசப்படுகின்றன.
இலங்கையின் அடையாளமாக தேசியகீதம், தேசியஇலட்சினை, தேசியகொடி, தேசியமிருகம், தேசியமலர், தேசியபறவை என்பன காணப்படுகின்றன.

வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்கள்

சீகிரியா
பொலனறுவை
கண்டி
அநுராதபுரம்
யாழ்ப்பாணம்
கதிர்காமம்
திருக்கோணமலை
மன்னார்
கொழும்பு
முன்னேச்சரம்
காலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.லியோன், தரம் 04

B.கபிசாந், தரம் 04



S.லக்சியா, தரம் 03

S.சாருகேசி, தரம் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017



M.மதுர்சனா, தரம் 03



சிறிதரன், தரம் 03

T.பவிஸ்காந்தன், தரம் 03

J.திர்சாலினி, தரம் 03

K.சபித்ரா, தரம் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர்

சைவசமயத்திற்கு அரும் பெரும் பணியாற்றியவர் சைவத்தமிழ் பெருமகனார் ஆறுமுகநாவலர் ஆவார். இவர் 1822 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை தாயார் பெயர் சிவகாமி அம்மையார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம். தமிழ் நாட்டின் புகழ் மிக்க சைவ ஆதீனமாக விளங்கிய திருவாடுதுறை ஆதீனம் இவரின் சைவ தமிழ் பணிகளை பாராட்டி "நாவலர்" பட்டம் வழங்கி கௌரவித்தது. அன்று முதல் ஆறுமுக நாவலர் என அழைக்கப்பட்டார்.

ஆறுமுகநாவலர் வாழ்ந்து பணியாற்றிய காலம் இலங்கையையும், இந்தியாவையும் ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலம். மேற்கத்தேய கலாசாரம், ஆங்கில கல்வி முறை வேற்றுமத செல்வாக்கு என்பன அப்பொழுது மக்களிடையே பரவியிருந்தது.

அதேவேளை சைவசமயம் தமிழ்மொழி சைவமரபுக்கல்வி, சைவத்தமிழ் கலாசாரம், என்பன சிறப்பிழந்த நிலையில் காணப்பட்டன. ஆறுமுகநாவலர் வாழ்ந்த சூழ்நிலையே சைவசமயத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அவரை தூண்டியது. சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அவர் செய்த தியாகங்கள் அளப்பரியன. நாவலர் இளமைப்பருவத்தில் கல்வி, அறிவு ஒழுங்குகளில் சிறந்து விளங்கினார். சிவபக்தி நிறைந்தவராகவும் திகழ்ந்தார்.

G.பார்த்தீபன்
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2 10

பொது அறிவு

1. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம்
   சபுகஸ்கந்த
2. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
   தலவாக்கலை
3. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
   அகலவத்தை
4. உலகிலுள்ள சமுத்திரங்களின் எண்ணிக்கை
   05
5. உலகில் உள்ள கண்டங்களின் எண்ணிக்கை
   07
6. காகித தொழிற்சாலை அமைந்துள்ள இடம்
   வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய
7. உலகிலே மிக நீளமான நதி.
   நைல்நதி
8. உலகிலேயே மிகப்பெரிய பாலைவனம்.
   சகாராபாலைவனம்

S.மிலுக்சன்
தரம் -5



C.மிலுக்சன்
தரம் - 05

K.டிசாந்தனி
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R.லிகான், தரம் 02

I.பிரனீசன், தரம் 02

R.டிலுக்சி, தரம் 02

P.சதூர்வின், தரம் 02

K.சருபனா, தரம் 02

R.உபேந்திரன், தரம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017

மிதுசாந், தரம் 01

D.அபிநாஸ், தரம் 01

K.நிசான், தரம் 01

M.பவிக்ஷன், தரம் 01

K.கிரிஷனா, தரம் 01

J.சர்மிதன், தரம் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் அதிகாலை புலர்ந்தது. பறவைகள் கீச்கீச் என்று வானில் பறந்தன. சூரியன் மெல்ல மெல்ல உதித்தது. மோகன் எழும்பி வந்து இயற்கை அழகை ரசித்து கொண்டிருந்தான். அவனது அம்மா மோகன் பாடசாலைக்கு செல்லவில்லையா? என கேட்டார். மோகன் இன்று பாடசாலை விடுமுறை என கூறினான். அவன் முகம் கழுவி உணவு உண்டு விட்டு விளையாடச் சென்றான். விளையாடிக் கொண்டே மைதானத்தை அடைந்தான். வலையில் சிக்கிய முயல் ஒன்று கஷ்டப்படுவதை பார்த்த மோகன், வலையை அறுத்து முயலை காப்பாற்றி போக விட்டான்.

எல்லா உயிர்களின் மீதும் கருணை காட்டவேண்டும்.

A.ஜதுர்ஷன்
தரம்-5

ஒலிம்பிக் விளையாட்டின் வரலாறு

1. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடாகும்.
2. அந்த நாட்டில் ஒலிம்பஸ் என்னும் மலை உள்ளது.
3. நவீன ஒலிம்பிக் போட்டிகளை தோற்றுவித்தவர் பிரான்ஸ் நாட்டின் பிரபு பியஸ் டி.குபேற்றின் ஆவார்.
4. ஒலிம்பிக் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன.
5. ஒலிம்பிக் போட்டிகளின் குறிக்கோள் விரைக, உயர்க, வலிமை பெறுக என்பதாகும்.
6. ஒலிம்பிக் போட்டிகள் ஒரே நாட்டில் நடைபெறுவதில்லை.
7. ஒலிம்பிக் கொடி வெள்ளை நிறத்துணியால் ஆனது.
8. ஒலிம்பிக் கொடியில் ஐந்து நிறங்கள் உள்ளன.

K.பவிசினி
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு

நான் ஒருநாள் பாதையில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்த போது என்னை யாரோ! அழைத்தது போல் இருந்தது. நான் பின்னால் திரும்பி பார்த்தேன். என் பின்னால் பாழடைந்த வீடு ஒன்று இருந்தது. நான் அதன் அருகே சென்றேன். அந்த வீடு என்னை அழைத்து அதன் கதையை கூறத்தொடங்கியது. இதற்கு முன் இங்கு வசித்தவர்கள் என்னை நன்றாக பார்த்து கொள்வார்கள். என் மீது சிறிய கீறல் பட்டாலும் எனக்காக கவலைப்படுவார்கள். ஒருநாள் வேறு ஊரில் வேலை கிடைத்ததால் என்னை விட்டு விட்டு சென்றுவிட்டார்கள். யாரும் வருவதில்லை அவர்களை பார்த்தால் என்னை பார்க்க வர சொல்லுங்கள் என்று அழுது கொண்டே புலம்பியது வீடு...

S.விஸ்மிதா
தரம் - 05

A.ஜதுர்சன்
தரம் - 05

V.சுவேத்தா
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P.சரு, தரம் 01

N.சுவாதிகா, தரம் 01

R.தபேசன், தரம் 01



P.மதுஷான், தரம் 01

N.நிசான், தரம் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017

M.சுஜித்மாதவன், தரம் 01

S.தீபக், தரம் 01



R.சதுர்சன், தரம் 01

S.விசாகன், தரம் 01

V.சரண்யா, தரம் 01

S.யதுசாலினி, தரம் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாணத்தின் சிறப்பம்சங்கள்

இயற்கை எழில் கொஞ்சும் இடமாக போற்றப்படுவது மத்தியமாகாணமாகும். இம் மாகாணத்தில் நுவரெலியா, கண்டி, மாத்தளை எனும் மூன்று மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாகாணத்தில் பின்வரும் சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன.

நுவரெலியா

பீதுறுதாலகால மலை, டெவன் நீர்வீழ்ச்சி, சீதைஅம்மன் கோயில், தேயிலை ஆராய்ச்சி நிலையம், கொத்மலை நீர்த்தேக்கம், சிங்கமலை சுரங்கம், ஹோட்டன் சமவெளி, பத்தனைபுல்நிலம், ஹக்கல பூங்கா போன்றன நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்றன

கண்டி

தலதாமாளிகை, தாவரவியல் பூங்கா, பேராதனை பல்கலைகழகம், ரன்தெனிகல நீர் தேக்கம், தும்பரை பள்ளத்தாக்கு போன்றன காணப்படுகின்றன.

மாத்தளை

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், அடர்ந்த காடுகள், மலைத்தொடர்கள் என்பன காணப்படுகின்றன.
இவையாவும் இயற்கையின் கொடைகளாக எமக்கு கிடைத்தவை.

S.சிந்துஜா
S.ஹபிஷாலினி
J.மிதுர்ஷன்
R.லோகபிரதாப்
தரம் - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் சிந்தித்து செய்தல் வேண்டும்

ஒரு வியாபாரி கடை ஒன்றை நடாத்தி வந்தார். அக்கடையில் எலி தொல்லை தாங்க முடியவில்லை. எலித்தொல்லையில் இருந்து தப்பிக்க ஒருநாள் இரவு பூனையை கடையின் உள்ளே வைத்து பூட்டிவிட்டார். எலிகள் கீச்சலிட்ட சத்தம் பூனைக்கு கேட்டது. பூனை கடையில் உள்ள பொருட்களை உடைத்து நாசம் செய்து விட்டு எலியை பிடித்து உண்டது. காலையில் முதலாளி கடையை திறந்த போது அவரது முட்டாள் தனத்தை புரிந்து தன்னை தானே நொந்து கொண்டார்.

G.அஜய்
தரம் - 05

அன்னை மொழி

குருவி ஒன்று மரத்திலே கூடு ஒன்றை கட்டி தனது குஞ்சுகள் மூன்றையும் அதில் வளர்த்து வந்தது. தினம் தினம் குருவி நீண்ட தூரம் சென்று இரையை கொண்டு வந்து குஞ்சு தின்ன கொடுத்திடும். இறைவன் தந்த இறகினால் பறந்து சென்று இரையை தேடி தின்னலாம். என்று குருவி சொன்னது. அதை கேட்டு இரண்டு குஞ்சுகள் தாயுடன் கிளம்பின. ஒன்று மட்டும் சோம்பலாக கூட்டிலேயே இருந்தது. எங்கிருந்தோ வந்த ஒருவன் குருவி குஞ்சை பிடித்து கொண்டு சென்று கூட்டில் அடைத்தான். தாய் கூறியது குருவி குஞ்சின் காதில் ஒலித்தது.



G.சருபன்
தரம் - 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழிகளும் அவற்றின் கருத்துகளும்

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - ஒற்றுமையே பலம்
2. யானைக்கொரு காலம் பூனைக்கு ஒருகாலம் - காலம் மாறிமாறி வரும்
3. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தி படாத மனம்
4. ஏட்டு சுரக்காய் கறிக்கு உதவாது - வெறும் புத்தகப்படிப்பு
5. கந்தையானாலும் கசக்கி கட்டு - வறுமையில் செம்மையாக வாழ்
6. பேராசை பெருநட்டம் - அதிக ஆசை தீமையை விளைவிக்கும்
7. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - முயன்றோர் தோற்பதில்லை
8. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் - சந்தர்ப்பத்தை தவற விடாதே
9. அழுத பிள்ளை பால் குடிக்கும் - முயற்சி பலன் தரும்
10. உப்பிட்டவரை உள்ளளவும் நினை - நன்றி மறத்தல் கூடாது.
11. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - இடைவிடாது முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்
12. அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய் - பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்.
13. அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு - எதையும் அளவோடு செய்தல் வேண்டும்
15. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - ஒருவரது உள்ளத்தின் சிந்தனை முகத்தில் தெரியும்.

R.யதுர்ஷிகா

J.லியோன்

B.கபிஷான்

K.தர்ஷன் - தரம்-4

வெற்றி

வெற்றி வந்தால் பணிவு அவசியம்.
தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்

R.சுஜீவன்
தரம் - 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017

முக்கிய தினங்கள்

01. சர்வதேச தாய் மொழி தினம் - பெப்ரவரி 21
02. சர்வதேச ஊனமுற்றோர் தினம் - பெப்ரவரி 15
03. சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 15
04. சர்வதேச குடிநீர் தினம் - மார்ச் 22
05. சர்வதேச தொழிலாளர் தினம் - மே 01
06. சர்வதேச அன்னையர் தினம் - மே 14
07. சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் - யூலை 17
08. சர்வதேச அகதிகள் தினம் - யூலை 28
09. சர்வதேச எழுத்தறிவு தினம் - செப்டம்பர் 8
10. சர்வதேச ஓசோன் தினம் - செப்டம்பர் 16
11. உலக சிறுவர், முதியோர் தினம் - ஒக்டோபர் 1
12. சர்வதேச தபால் தினம் - ஒக்டோபர் 9
13. உலக சமாதான தினம் - ஒக்டோபர் 26

C.வைஸ்ணவி
K.தக்சான்
K.தனுசன்
S.லூசியா - தரம் - 4

அம்மா

சிற்பிக்குள் உள்ள முத்தாய்
கருவறைக்குள் என்னை சுமந்தாய்
பத்து மாதங்கள் சுமந்து பெற்றாய்
கண்ணை இமை காப்பது போல்
என்னை பாலூட்டி சீராட்டி வளர்த்து
அன்னம் ஊட்டி வளர்த்தாய்
நான் இந்த உலகில்
பிறந்த உடன் பார்த்த
முதல் பெண் தெய்வம் அம்மா.

R.யதுர்ஷிகா
தரம்-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உருவாக்கிய பாடல்

பெரிய சிறிய மரங்களாம்
காற்றில் அசையும் மரங்களாம்
பழங்கள் தரும் மரங்களாம்
நிழல் தரும் மரங்களாம்.

நன்மை செய்யும் மரங்களாம்
பூக்கள் தரும் மரங்களாம்
கிளைகள் கொண்ட மரங்களாம்
இலைகள் கொண்ட மரங்களாம்.

ரசனைக் கொண்ட மரங்களாம்
அழகு நிறைந்த மரங்களாம்
ஆசையான மரங்களாம்
வேர்கள் கொண்ட மரங்களாம்.

பசுமையான மரங்களாம்
பச்சை நிற மரங்களாய்
காட்சியளிக்கும் மரங்களாம்
மகிழ்ச்சி தரும் மரங்களாம்.

இறைவன் தந்த மரங்களாம்
மண்ணில் வளரும் மரங்களாம்
மண்ணரிப்பை தடுக்குமாம்.

பெரிய சிறிய மரங்களாம்....

V.சுவேதா
K.யதுஷா
M.வினோதனி
S.கவிப்பிரதீஸ்

தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 2017

பிராணிகளின் விசேட இயல்புகள்

பல்லி

- இது வீட்டில் இயற்கையாக காணப்படும் ஒரு பிராணியாகும்.
- இது ஊர்வன இனத்தை சேர்ந்ததாகும்.
- பல்லி விழுந்த உணவை நாம் உண்பது பாரிய ஆபத்தாகும்.
- தனது எதிரிகளிடம் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள தனது வாலை துண்டித்துவிடும்.
- பல்லியின் முட்டை வெள்ளை நிறம்.
- பல்லியின் சத்தத்தை சொல்லும் என்பர்

பூனை

- பூனை மிக சுத்தமான பிராணியாக காணப்படுகின்றது.
- இது தனது மலத்தை மண்ணினுள் புதைத்து விடும்.
- அதனுடைய உடம்பை நாக்கினால் நக்கி சுத்தப்படுத்தி கொள்ளும்.
- மிகச்சிறிய சத்தத்தை கூட தெளிவாக கேட்க கூடியது.
- கூர்மையான பற்களை உடையது.
- இது எதிரிகளை கண்டால் சீறும்.

யானை

- இது மிகப்பெரிய மிருகமாகும்.
- மனிதர்களால் தூக்க முடியாத பாரத்தை தூக்கக்கூடியது.
- கதிர்காம திருவிழாவிலும், கண்டி பெரகராவிலும் யானைகளை பயன்படுத்துவர்.
- யானையின் காதுகள் சுளகு போல் இருப்பது தனது உடம்பை தான் பார்க்காமல் இருப்பதற்காகும்.
- யானைகளை சரணாலயத்தில் வைத்து பாதுகாக்கின்றனர்.
- இலங்கையில் யானைகளின் சரணாலயம் பின்னவெல என்ற இடத்தில் அமைந்துள்ளது..
- இது பிளிரும்.



R.லக்ஷிகா
A.சுபாஷ் நிலுக்ஷன்
S.லக்ஸ்மிதா
V.கவிப்பிரசாந் (தரம் - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அம்மா

இந்த உலகில்
ஈடு இணையில்லா
எதிர்பார்ப்புக்கள் இல்லாத
பாரபட்சம் இல்லாத
என் உயிரே
என் அம்மா.

R. அருபன்
தரம் - 04

பழமொழிகள்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
ஆத்திரகாரனுக்கு புத்தி மட்டு
ஆழம் அறியாமல் காலை விடாதே
பொறுத்தார் பூமி ஆழ்வார்
மின்னுவதெல்லாம் பொன் அல்ல
அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

P. சாருகேசி
தரம் - 03

தென்னை

01 தென்னை மரம் மிகவும் பயன் மிக்கது.
02. தென்னை மிக உயரமாக வளரும்.
03. தென்னையில் பல இனங்கள் உண்டு.
04. தென்னை தேங்காய், இளநீர் தருகின்றது.
05. தென்னையின் இலைகளை ஓலை என்று கூறுவர்.

J.அம்சிக்கா
தரம் - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள்

பள்ளி

பள்ளிக்கூடம் போகலாம்
பாடங்களை படிக்கலாம்
தள்ளித்தள்ளி விடுகின்ற
வறுமையினை போக்கலாம்
வெள்ளை மனம், அன்பு கொண்ட
ஆசானை போற்றலாம்
துள்ளி ஓடும் மானைப்போல்,
பள்ளி தினமும் செல்லலாம்

மழை

கடலில் இருந்து உருவாகி
காற்றில் இருந்து வருகின்றாய்
மலைகள், மரங்கள் பார்க்கின்றாய்
மழையாய் நீயும் பொழிகின்றாய்
எங்கள் உழவர் மகிழ்ந்திடவே
ஏரி, குளங்கள் நிறைக்கின்றாய்
உன்னை நாங்கள் சேமிப்போம்
உலகை நீயும் காத்திடுவாய்..

D.எப்சிபா
தரம்-5

வீடு

நல்ல நல்ல வீடு
நாங்கள் வாழும் வீடு
கல்லும் மண்ணும் சாந்தும்
கலந்து கட்டும் வீடு
நல்ல யன்னல் ஊடே
மெல்ல காற்றும் வீசும்
கொட்டும் மழையில் எம்மை
காக்கும் நல்ல வீடு



R.கபிலாசினி
தரம் - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அறிமுகம்

எண்பதுகளில் காலையில் சிங்கள மாணவர்களுக்கும், மதியவேலைக்கு பிறகு தமிழ் மாணவர்களுக்குமாக தற்போதைய நு/அக்கரப்பத்தனை சிங்கள ம.வி கட்டிடத்தில் செயற்பட்டு வந்த கற்றல் நடவடிக்கைகள் அமரர் கௌரவ சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா அவர்களின் செயலூக்கத்தால் 1984.11.24 அன்று தொடக்கம் அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலயமாகவும் பின் தமிழ் மகா வித்தியாலயமாகவும் தனித்து இயங்கத் தொடங்கியது.

அதன் பின் கடந்த வருடங்களில் தரம் 1 தொடக்கம் 13 வரை இயங்கி வந்த இப்பாடசாலை கடந்த 2013.02.13 அன்று முதல், தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட தனிப் பாடசாலையாக தனித்து இயங்கி வருகின்றது. அந்த வகையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஆரம்பப்பிரிவின் வளர்ச்சி கட்டத்தை நோக்குமிடத்து.

- 2007 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **6 பேர், வகுப்பாசிரியர் - செல்வி கு.சாந்தி.**
- 2008 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **2 பேர், வகுப்பாசிரியர் - திரு ஜெ.பபியான்**
- 2009 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **6 பேர், வகுப்பாசிரியர் - திருமதி M.மதிவதனி.**
- 2010 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **6 பேர், இதில் மாணவர் ரோ.ரோஷான் 176 புள்ளி பெற்று மாவட்டத்தில் 4ம் இடம், நுவரெலியா வலயத்தில் முதலாம் இடம். C.ஸ்ரீநிசா - 150, N.பவநிஷா - 148, R.யதுஷா - 148, N.கௌசல்யா - 147, S.இந்துஜா - 143, வகுப்பாசிரியர் - ஜெ.பபியான்**
- 2011 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர் ஒருவர், **வகுப்பாசிரியர் - திருமதி மெடோனாதேவி**
- 2012 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **5 பேர், வகுப்பாசிரியர் - திருமதி டீ.சசிரேகா.**
- **2013.02.13 ஆரம்பப்பிரிவு தனிப் பாடசாலையாகக்கப்பட்டு திருமதி டீ.ராஜகுமாரி அவர்கள் பதில் அதிபராக நியமனம்.**
- 2013 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **5 பேர், வகுப்பாசிரியர்கள் - திரு ஏ.ஆறுமுகம், திருமதி டீ.சசிரேகா.**
- **2014.02.05 அதிபராக திரு எம்.லோகநாதன் அவர்கள் பொறுப்பேற்றார்.**
- **2014 மின்சார இணைப்பு வழங்கப்பட்டது.**
- **2014.06.15 சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு பெற்றோரின் பேராதரவுடன் நீர் குழாய்கள் தனியாக பொருத்தப்பட்டு நீர்வசதி பெறப்பட்டது.**
- **2014.07.01** மாணவத் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னங்கள் அணிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2014 ஜீலை தமிழ்த்தினப்போட்டி அக்கரப்பத்தனை பிரிவில் பேச்சு இரண்டாமிடம் செல்வி எஸ்.பேபிஷாமினி.
- 2014.09.01 அக்கரப்பத்தனை ஜெயசந்திரன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் அணுசரனையில் ஒருவருடத்திற்கு வீரகேசரி பத்திரிகை கிடைக்கப்பெற்றது.
- 2014.09.04 கல்விசேவைகள் அமைச்சால் மாணவர் போஷாக்கு மட்டத்தை உயர்த்த பால்பக்கட் வழங்கப்படுகின்றன.
- 2014 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் 6 பேர், ஏ.சிந்துஜன் - 169, கே.சுவேத்தா, எஸ்.ரொனால்ஸ் - 167, ஆர்.கனிஸ்கா - 160, ஆர்அபிநாத் - 158, ஈ.கபிஷன் - 158, 70 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் 28 பேர், வகுப்பாசிரியர் - திரு T.புண்ணியமூர்த்தி.
- 2014 முதலாவது நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.
- 2014 நவராத்திரி விழா கோட்டமட்டப் பேச்சு போட்டியில் முதலாமிடம், வலயமட்ட போட்டியில் இரண்டாமிடம் செல்வி எஸ்.பேபிஷாமினி.
- 2014 நவம்பர் 15 பாடசாலை வரலாற்றில் முதலாவது சிறுவர் சஞ்சிகை "முதல் எழுத்து" வெளியீடு.
- 2015 முதல் தடவையாக செயற்பட்டு மகிழ்வோம் "சிறுவர் விளையாட்டுப் போட்டி" நடாத்தப்பட்டது.
- 2015 தமிழ்மொழித்தினப் போட்டியில் பிரதேச மட்டத்தில் கதை கூறல் போட்டியில் முதலாம் இடம், வலய மட்டத்தில் முதலாம் இடம், மாகாண மட்டத்தில் 4ம் இடம். செல்வன் H.அஜய் தரம் - 4 பிரதேச மட்டத்தில் M.டினுஷிகா, தரம் 5 பேச்சுப் போட்டி 2ம் இடம், R.யோகன்யா, தரம் 4 பாவோதல் 3ம் இடம், S.கபிலாவினி, தரம் 5 எழுத்தாக்கம் 3ம் இடம்.
- 2015 செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டுப் போட்டியில் தரம் - 4 இற்கான போட்டியில் வலய மட்டத்தில் இரண்டாம் இடம்.
- 2015 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர் M.டினுஷிகா - 165, 70இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் 28 பேர், வகுப்பாசிரியர் - திரு ஜெ.பரியான்.
- 2015.11.29 இரண்டாவது "முதல் எழுத்து" சிறுவர் சஞ்சிகை வெளியீடு.
- 2016 ஆம் செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு போட்டியில் மாவட்ட மட்டத்திற்கு மாணவர்கள் தெரிவு.
- வேர்ல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரனையுடன் தரம் 3 இற்கான மாதிரி வகுப்பறை அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றமை (S.சிவானுஜா-170 , S.சரூஸ்-157 , R.பிரியதர்சினி-164 , R.யோகன்யா-160) 30 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். வகுப்பாசிரியர் - திரு A.ஆறுமுகம், திரு.S.நகுலேஸ்வரன்
- **2016.12.01 முன்றாவது "முதல் எழுத்து"** சிறுவர் சஞ்சிகை வெளியீடு.
- 2017 ஆம் ஆண்டு தமிழ் மொழித்தின போட்டிகளில் கோட்ட மற்றும் வலய மட்ட போட்டிகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (பேச்சு K.பிறைமி 1ம் இடம், எழுத்தாக்கம் S.ருசாந்தினி, பாவோதல் S.அசானிபெர்சியா)
- சிறுவர் மெய்வல்லுனர் போட்டிகளுக்கு மாவட்ட மட்ட போட்டிகள் வரை தரம் 04 மற்றும் தரம் 05 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
- பாடசாலையை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 2 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றமை (S.விக்ரம் - 160, J.ரவிநாத் - 173) 23 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். வகுப்பாசிரியர் - திரு.T.புண்ணியமூர்த்தி, திருமதி.A.N.B.லூசியன் மேர்சி
- கோட்டமட்ட சமயப்போட்டி K.பிறைமி 1 ஆம் இடம்.
- வேர்ல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரனையுடன் சிறுவர்நேய மாதிரி வகுப்பறைகள் இரண்டு அமைக்கப்பட்டது.
- **2017.12.10 நான்காவது "முதல் எழுத்து"** சிறுவர் சஞ்சிகை வெளியீடு.
- 2018 ஆம் சிறுவர் மெய்வல்லுனர் போட்டிகளில்....

  தரம் 03, பெண்கள் வலயமட்டத்தில் 4 ஆம் இடம்.

  தரம் 04 ஆண்கள் 3 ஆம் இடம் பெண்கள் 2 ஆம் இடம்

  தரம் 05 ஆண்கள் 1 ஆம் இடம் பெண்கள் 1 ஆம் இடம்

  பெற்று மாவட்ட மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.
- சமயபோட்டியில் வலய மட்டத்தில் 1 ஆம் இடம் R.லிக்சிக்கா தரம் 04.
- 2018 ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் (S.விஸ்மிதா 161, C.மிலுக்சன் 160, R.சுஜீவன் 159, A.ஜதுர்சன் 158, N.அனுசிக்கா 154) 70 புள்ளிகளுக்கு மேல் 23 மாணவர்கள், வகுப்பாசிரியர் திரு.S.சிவக்குமார்.
- வேர்ல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரனையுடன் சிறுவர்நேய மாதிரி வகுப்பறைகள் இரண்டு அமைக்கப்பட்டது.
- **2019.01.20 ஐந்தாவது "முதல் எழுத்து"** சிறுவர் சஞ்சிகை வெளியீடு.

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாசிரியரின் நன்றி பகிர்வு...

முதல் எழுத்தின் ஐந்தாவது இதழ் ஊடாக மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி எமது பாடசாலையின் பல்வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முதல்எழுத்து முக்கிய இடத்தினை பெறுகின்றது.

சிறார்கள் பாடசாலையை விட தமது சூழலிலேயே அதிகமான விடயங்களை கற்றுகொள்கின்றனர். இதனை இவர்கள் ஆக்கங்களிலும், சித்திரங்களிலும் தமது சிந்தனையாக வெளிப்படுத்தியுள்ளனர். நாம் அவர்களின் மட்டத்தில் இருந்து ரசிக்கும்போதே அவற்றின் ரசனைகளை புரிந்து கொள்ள முடிகின்றது. மாறாக நமது மட்டத்திற்கு சென்று குறை காண்பது பொருத்தமன்று. சிறார்களின் இன்றைய கற்பனைகளே எதிர்கால சாதனைகளாக உருப்பெறுகின்றன.

சிறார்கள் பரந்து விரிந்த மனதை கொண்டவர்கள், அவ் அனுபவத்தை நாமும் பெற்றிருப்போம் இருப்பினும் மீண்டும் ஒருமுறை அந்நிலைக்கு சென்று அவ் அனுபவத்தை பெறுவதென்பது சாத்தியமன்று இருப்பினும் அவர்களோடு இணைந்து செயற்படும்போது உணரலாம். அவ்வகையில் நாங்கள் எங்கள் பிள்ளைகளிடம் கண்ட திறன்களை வைத்து இந்நூலினை உருவாக்க உதவிய அனைவருக்கும் நன்றிகளை பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன் .

எங்களோடு இணைந்து கைகோர்த்த அனைவரையும் நினைவு கூர்ந்து நன்றிகளை தெரிவித்து கொள்வதுடன். நூலிற்கான வாழ்த்துரைகள், ஆசியுரைகள் என்பவற்றை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். வாழ்த்துரையை வழங்கிய எழுத்தாளர், கவிஞர், "முதல் எழுத்தின்" ஆரம்பகர்த்தா நண்பர் திரு.செ.ஜெ.பபியான் அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள். விழாவில் கலந்து சிறப்பித்த அனைத்து அதிதிகளுக்கும் பங்குபற்றிய ஆசிரியர்கள், நண்பர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள். அத்தோடு ஆக்கங்களை மெருகூட்டி நிகழ்வுகளை அரங்கேற்றிய எமது பாடசாலையின் ஆசிரியர்கள், ஆக்கங்களை படைத்த மாணவர்களுக்கும் நன்றிகள்.

விழா சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோருக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். அச்சு பதிப்பை மேற்கொண்ட நிவ் சைன் கொம்பியூட்டர்ஸ், அச்சகம் மற்றும் செல்வி P.தர்சினி ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன். எல்லா விதத்திலும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய அதிபர் மு.லோகநாதன் அவர்களுக்கும் எமது பாடசாலையின் ஆசிரியர் குழாத்தினருக்கும். மனம் நிறைந்த நன்றிகள். இன்னும் இங்கு பெயர் குறிப்பிடாது விட்ட ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்லுள்ளங்கள் மற்றும் அனைவருக்கும் பணிவான வாழ்த்துக்களும் நன்றிகளும்.

நன்றிகள்

திரு.S.சிவக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 3

தரம் 2

தரம் 5

தரம் 4

தரம் 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org